**FIRST INFORMATION REPORT**
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM I
8073012

C

1. District : மாவட்டம் : விழுப்புரம் | PS: காவல்நிலையம் : ஊ.த.க விழுப்புரம் | Year: ஆண்டு | FIR No.: மு.த.அ. எண் 06/2018/AC/VPM | Date: நாள் 08.06.2018

2. (i) Act சட்டம்: இதச — Sections பிரிவுகள்: 167, 468, 471, 477(A),
   (ii) Act சட்டம்: — Sections பிரிவுகள்: 420, 409 IPC.
   (iii) Act சட்டம்: PC Act 1988 — Sections பிரிவுகள்: 13(2) r/w 13(1)(c) of PC Act r/w 37 IPC.
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் — Date from : நாள் முதல் 2013-2014 மற்றும் — Date to : நாள் வரை
   Time Period : நேர அளவு — Time from : நேரம் முதல் 2014-2015 — Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 08.06.2018 — Time : நேரம் 09.00 Hrs.
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் — Time : நேரம்

4. Type of Information : Written/ Oral :
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — கணினி தட்டச்சு மூலம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் — ஊராட்சி மன்ற அலுவலகம், அரசம்பட்டு. சுமார் 100 கி.மீ தென் மேற்கு
   Beat Number : முறைக் காவல் எண் — (b) Address : முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District :
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் — திரு. K. செல்வதுரை
   (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் — கலியபெருமாள்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு — (d) Nationality : நாட்டினம் இந்தியன் — (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் — (g) Address : முகவரி — மாரியம்மன் கோவில் தெரு, புட்டை கிராமம், சங்கராபுரம் வட்டம், விழுப்புரம் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
   (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   1) திரு. A.K. ரவி S/o. கண்ணன், தலைவர், ஊராட்சிமன்ற அலுவலகம், அரசம்பட்டு.
   2) திரு. S. கோவிந்தன் S/o. சிங்கண்ணன், துணை தலைவர், ஊராட்சி மன்ற அலுவலகம் அரசம்பட்டு.
   3) திருமதி. G. சங்கீதா W/o. T. அவரங்கன், செயலாளர், ஊராட்சி மன்ற அலுவலகம், அரசம்பட்டு, சங்கராபுரம் வட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   முன் விசாரணையால் தாமதம்.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம். (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

கனம் சிறப்பு நீதிபதி (ஊழல் தடுப்பு வழக்குகள்), விழுப்புரம் அவர்கள் முன்பாக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. திரு.K.செல்வதுரை, S/o கலியபெருமாள், மாரியம்மன் கோயில் தெரு, பூட்டை கிராமம், சங்கராபுரம் வட்டம், விழுப்புரம் மாவட்டம் என்பவர் இயக்குநர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குநரகம், சென்னை அவர்களுக்கு அனுப்பிய புகார் மனுவின் அடிப்படையில், இயக்குநரக குறிப்பாணையின்படி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கடலூர் மூலம் முதல் நிலை விசாரணை செய்யப்பட்டது. அத்தகைய முதல்நிலை விசாரணையில் தெரியவந்த செய்திகள் பின்வருமாறு:- விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரம் வட்டத்திற்குட்பட்ட அரசம்பட்டு ஊராட்சியில் கடந்த 2013-2014, 2014-2015 ஆண்டுகளில் அரசம்பட்டு ஊராட்சியின், ஊராட்சி மன்ற தலைவராக A.K.ரவி, S/o கண்ணன், ஊராட்சி மன்ற துணை தலைவராக S.கோவிந்தன், S/o, செங்கண், அரசம்பட்டு ஊராட்சியின் செயலாளராக G சங்கீதா, W/o, T.அவரஞ்சன் ஆகியோர் பணிபுரிந்துள்ளனர். மேற்சொன்ன குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் ஊழல் தடுப்பு சட்டம் 1988, பிரிவு 2(c) ன்படி சம்பவ சமயத்தில் பொது ஊழியர்கள் ஆவர். மேற்சொன்ன அரசம்பட்டு ஊராட்சியில் கடந்த 2013-2014, 2014-2015ம் ஆண்டுகளில் ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கைப்பம்புகள், மின்மோட்டார் பம்புகள், சிறிய மின்மோட்டார்கள், மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டிகள் மற்றும் தெருவிளக்குகளை இயக்குதல் மற்றும் பராமரித்தல் சம்மந்தமாக அரசாங்கத்தின் வழிகாட்டி நெறிமுறைகள், கிராம பஞ்சாயத்துக்குட்பட்ட செலவின பராமரிப்பு ரொக்க, இருப்பு பதிவேட்டுகளின் அடிப்படையில் வழிகாட்டி நெறிமுறைகளை மீறி கூடுதல் மிகை செலவினங்கள் செய்யப்பட்டுள்ளது முதல்நிலை விசாரணையின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு தெரிய வருகிறது. விசாரணையின் அடிப்படையில் 2013-2014 ம் ஆண்டில் அரசம்பட்டு ஊராட்சியில் கைப்பம்பு இயக்குதல் மற்றும் பாராமரித்தல் கூடுதல் மிகை செலவினங்களின் விவரம் பின்வருமாறு : (இதன் தொடர்ச்சி தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS ...............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் திரு. N. [illegible] DSP, VAC, VPM நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 08/6/18

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு [illegible handwriting] மு.த.அ. [illegible handwriting]

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
08.06.2018.

Name: பெயர் R. [illegible]
Rank: நிலை காவல் ஆய்வாளர், ஊ.த.க. பிரிவு, விழுப்புரம்.

<u>கு.எண்.06/2018/AC/VPM முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி</u>

<u>ஊராட்சியின் பெயர் : அரசம்பட்டு. தணிக்கை வருடம் : 2013 - 2014</u>

| கைப்பம்புகளின் எண்ணிக்கை X அனுமதிக்கப்பட்ட செலவுத்தொகை (ஒரு ஆண்டில்) | மொத்த செலவினம் | கூடுதல் மிகை செலவினம் |
|---|---|---|
| 2X600 = 1,200/- | 3,99,440/- | 3,98,240/- |

| மொத்த மின்மோட்டார்களின் எண்ணிக்கை X அனுமதிக்கப்பட்ட செலவுத்தொகை (ஒரு ஆண்டில்) | மொத்த சிறிய மின்மோட்டார்கள் எண்ணிக்கை X அனுமதிக்கப்பட்ட செலவுத்தொகை (ஒரு ஆண்டில்) | மொத்த செலவினம் | கூடுதல் மிகை செலவினம் |
|---|---|---|---|
| 5X7500 = 37,500/- | 32X5500 = 1,76,000/- | 6,92,190/- | 4,78,690/- |

| தெருவிளக்குகள் (குழல் 280X49/-, சோக் 140X150/-, ஸ்டார்ட்டர் 420X10/- + சோடியம் 16X450/-, கன்டென்சர் 16X450/-, இக்னேட்டர் 16X450/- + CFL 63X1050/-) X அனுமதிக்கப்பட்ட செலவுத்தொகை (ரூ.600/- ஒரு ஆண்டில் அனுமதிக்கப்பட்ட செலவு) | மொத்த செலவினம் | கூடுதல் மிகை செலவினம் |
|---|---|---|
| 1,26,670/- | 5,39,780/- | 4,13,110/- |

<u>ஊராட்சியின் பெயர் : அரசம்பட்டு. தணிக்கை வருடம் : 2014 - 2015</u>

| கைப்பம்புகளின் எண்ணிக்கை X அனுமதிக்கப்பட்ட செலவுத்தொகை (ஒரு ஆண்டில்) | மொத்த செலவினம் | கூடுதல் மிகை செலவினம் |
|---|---|---|
| 2X600 = 1,200/- | 1,51,420/- | 1,50,220/- |

| மொத்த மின்மோட்டார்களின் எண்ணிக்கை X அனுமதிக்கப்பட்ட செலவுத்தொகை (ஒரு ஆண்டில்) | மொத்த சிறிய மின்மோட்டார்கள் எண்ணிக்கை X அனுமதிக்கப்பட்ட செலவுத்தொகை (ஒரு ஆண்டில்) | மொத்த செலவினம் | கூடுதல் மிகை செலவினம் |
|---|---|---|---|
| 5X7500 = 37,500/- | 35X5500 = 1,92,500/- | 10,01,430/- | 7,71,430/- |

| தெருவிளக்குகள் (குழல் 280X49/-, சோக் 140X150/-, ஸ்டார்ட்டர் 420X10/- + சோடியம் 16X450/-, கன்டென்சர் 16X450/-, இக்னேட்டர் 16X450/- + CFL 63X1050/-) X அனுமதிக்கப்பட்ட செலவுத்தொகை (ரூ.600/- ஒரு ஆண்டில் அனுமதிக்கப்பட்ட செலவு) | மொத்த செலவினம் | கூடுதல் மிகை செலவினம் |
|---|---|---|
| 1,26,670/- | 6,05,920/- | 4,79,250/- |

அரசம்பட்டு ஊராட்சியில் கூடுதல் மிகை செலவினங்கள் செய்தமைக்கு ஊராட்சி செலவின வழிகாட்டி நெறிமுறைக்கு முரணாக செலவினத்துக்கான ஊராட்சியின் தீர்மானம், செலவின சீட்டுக்கள், ரசீதுகள், படிவங்கள், சொத்துக்கள் இருப்பு, சொத்துக்கள் கழிவு மற்றும் சம்மந்தப்பட்ட இதர தொடர்புடைய பதிவேடுகள் பராமரிக்கப்படவில்லை எனவும் தெரிய வருகிறது. மேலும், மேற்சொன்ன அரசம்பட்டு ஊராட்சியில் கூடுதல் மிகை செலவினம் சம்மந்தமாக துறை ரீதியான ஆண்டு தணிக்கையின்போதும், தணிக்கை குறிப்புகளில் மேற்சொன்ன காரணங்களை சுட்டிக்காட்டி, விளக்கம் கோரப்பட்டு, நிலுவையில் உள்ளதும் விசாரணையில் தெரிய வருகிறது. மேலும் அரசம்பட்டு ஊராட்சியில் கடந்த 2013-2014, 2014-2015

ஆண்டுகளில் மேற்சொன்ன மிகை செலவின தலைப்புகளில் செய்துள்ள மிகை செலவினமானது, செலவினங்கள், பதிவேடுகள், சொத்துக்களின் இருப்பு ஆகியவற்றை பொறுத்து சந்தேகத்திற்கு இடமளிக்கும் வகையிலும், அரசு பணத்தை வேண்டுமென்றே கையாடல் செய்யவேண்டும் என்ற உள்நோக்கத்தோடு, பொய்யான ஆவணங்கள் புனையப்பட்டு, நேர்மையின்றி ஏமாற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டு, பொய் கணக்கு தயாரித்து, அரசு பணத்தை கையாடல் செய்த பொது ஊழியர்களான குற்றஞ்சாட்டப்பட்ட நபர்கள் (1)A.K.ரவி, (2)S.கோவிந்தன், (3)G.சங்கீதா ஆகியோர்கள் ஒன்று சேர்ந்து, கூட்டாக மேற்கூறிய செயல்களில் ஒத்த கருத்துடன் ஒத்துழைத்து ஈடுபட்டு, செயல்கள் செய்திருப்பது பிடிக்கக்கூடிய குற்றம் நடந்திருப்பதற்கு வலுவான சந்தேகம் ஏற்படுத்த போதுமான சங்கதிகள் இருப்பது தெரியவந்துள்ளது. ஆகையால், மேற்சொன்ன மூவர் பெயரிலும் குற்ற எண். 06/2018/AC/VPM சட்டப்பிரிவுகள் 167, 468, 471, 477(A), 420, 409 இந்திய தண்டனை சட்டம் 1860, 13(2) உடன் இணைந்த 13(1)(c) ஊழல் தடுப்பு சட்டம் 1988 மற்றும் உடன் இணைந்த 37 இந்திய தண்டனை சட்டத்தின்படி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குநரகம், சென்னை குறிப்பாணை எண்,PE 387/2015/RDP/HQ, நாள்.31.5,2018-ன்படி இன்று 08.06.2018-ந்தேதி 09.00 மணிக்கு R.எழிலரசி, காவல் ஆய்வாளர், ஊ.த.க.பிரிவு, விழுப்புரம் ஆகிய என்னால் வழக்கு பதிவு செய்யப்பட்டு புலன் விசாரணைக்காக திரு.ந.தேவநாதன், காவல் துணை கண்காணிப்பாளர், ஊ.த.க.பிரிவு, விழுப்புரம் அவர்களின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை அசல், சிறப்பு நீதிபதி (ஊழல் தடுப்பு வழக்குகள்), விழுப்புரம் அவர்களுக்கும், முதல் தகவல் அறிக்கையின் நகல் காவல் கண்காணிப்பாளர், மேற்கு சரகம், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குநரகம், சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. மற்றொரு நகல் வழக்கின் கோப்பில் வைக்கப்பட்டது.

R.எழில் 08/6/18

Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Villupuram.